**OS.No.148/2021 D.W.1-சாந்தகுமாரி 15.04.2026**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் தந்தைக்கு சொந்தமான நாவலூர் கிராமத்தில் அமைந்துள்ள மற்றொரு நிலமான 20 1/2 சென்ட் நிலத்தை என் தந்தை என் சகோதரர்கள் ராஜாபாதர், ஜெய்சங்கர், பாஸ்கரன் ஆகியோர்களுக்கு 19.10.2004 அன்று பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் முன்னிலைக்கு செட்டில்மெண்ட் செய்து வைத்தார் என்றால் அவ்வாறு எந்த செட்டில்மெண்ட்ட பத்திரமும் எழுதி வைக்கவில்லை. தற்போது என் முன் காண்பிக்கப்படும் 19.10.2004 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் இருப்பது என் தந்தையின் கையொப்பம் இல்லை. 19.10.2004 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை என் தந்தை தான் என் சகோதரர்கள் மூவருக்கும் எழுதி வைத்தார் என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்து விட்டது என்றும் சொன்னால் சரியல்ல. 19.10.2004 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால் 2014ல் சென்னை உயர்நீதிமன்றத்தில் ராஜேஸ்வரி, பிரேமகுமாரி, மோகன் ஆகியோர்கள் வழக்கு போட்ட பிறகு தான் எனக்கு தெரியவந்தது. மேற்படி 20 1/2 சென்டை 2005லேயே என் சகோதரர்கள் தனலட்சுமி மற்றும் வேலன் ஆகியோருக்கு விற்றுவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி 20 1/2 சென்ட் தற்போது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் யாருடைய அனுபவத்திலும் இல்லை. மேற்படி 20 1/2 சென்ட் நிலம் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளது செல்லாது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதில் நான் ஆஜர் ஆகியுள்ளேன்.

மேற்படி நிலத்தை குபேந்திரன் என்பவரின் மனைவி சரோஜா என்பவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சரோஜா என்பவர் கிரயம் பெற்ற போது நான், மோகன், பிரேமகுமாரி ஆகியோர்கள் தலா ரூபாய் ஒரு லட்சம் பெற்றுக் கொண்டு உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. எனக்கு, சரோஜா கிரயம் பெற்றது தெரியும் என்றும், அவரிடமிருந்து பணத்தை பெற்றுகொண்டு உறுதிமொழி பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றும், தற்போது இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

வழக்கில் பதில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எனது பதிலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், அவர் தாக்கல் செய்யவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் நாளது தேதி வரை பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கில் என் தந்தையுடைய சொத்துக்கள் எதுவும் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றும், எனவே அனைத்து சொத்துக்களும் பாகப்பிரிவினை செய்யப்படவேண்டுமென்றும் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளார்கள்.

இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்து என் தந்தை 26.06.1959-ல் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனவே வழக்கு சொத்திற்கு என் தந்தை தான் உரிமையாளர் என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் என் தந்தை சொத்தை அனுபவிக்கவில்லை. வழக்கு சொத்து என் தந்தையின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் அந்த சொத்து குறித்து அவருக்கு எல்லா உரிமையும் உண்டு என்றால் சரிதான். என் தந்தை இறக்கும் தருவாயில் எங்கு வசித்து வந்தார் என்றால் என் தாயாருக்கு சொந்தமான கோடம்பாக்கத்தில் உள்ள வீட்டில் இருந்தார். என் தந்தையை எனது சகோதரர்கள் தான் கவனித்து வந்தார்கள் என்றால் சரிதான். என் சகோதரர்கள் என் தந்தையை நன்றாக கவனித்து வந்ததால் தான் என் தந்தை எனது 3 சகோதரர்கள் மீது தனித்தனி செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்திருப்பதாக என் சகோதரர்கள் 2014ல் சொன்னார்கள். 2014க்கு பிறகு மேற்படி செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை, ஆனால் சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற C.S.846/2014 வழக்கில் நான் எனது தரப்பு ஆட்சேபனையை என் வழக்கறிஞர் மூலம் தெரிவித்துள்ளேன்.

C.S.846/2014 வழக்கில் சம்மன் வந்த பிறகு நாளது தேதி வரையில் எனது ஆட்சேபனையை தெரிவித்தேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், அவர் தாக்கல் செய்யவில்லை. C.S.846/2014 வழக்கு முதலில் தாக்கல் செய்தபோது இந்த வழக்கு சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் குறித்து பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். ஆனால் வழக்கு போட்டவர்கள் கேட்டிருப்பார்கள். எனது எதிர்வழக்குரையில் எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின் படி எனக்கு வழக்கு சொத்து ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் அவ்வாறு கூறவில்லை. எனது எதிர்வழக்குரையில் 5வது பத்தியில், என் தந்தை உயிருடன் இருக்கும் போது ஒரு வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததாகவும், அதன் படி 13 செண்ட் நிலத்தை எனக்கு ஒதுக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் என் தகப்பனார் அவரது சொத்தை எனக்கு கொடுத்தார். என் குடும்பத்திற்குள் வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெறவில்லையா என்றால் என் தகப்பனார் அவரது சொத்தை பொறுத்து எனக்கு 13 செண்ட் கிராம நத்தம் காலிமனையை கொடுத்தார். என் தாத்தா மற்றும் என் தாயார் வீட்டு சொத்தை பொறுத்து பாகப்பிரிவினை நடைபெறவில்லை. எங்கள் குடும்பத்திற்கிடையில் வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றதாக எனது எதிர்வழக்குரையில் சொல்லியிருப்பது தவறு என்றால் சரிதான். என் தந்தை வழக்கு சொத்தை எனக்கு எந்த வருடம் கொடுத்தார் என்றால் அக்டோபர் மாதம் 2009ம் ஆண்டில் வாய்மொழியாக கொடுத்தார். 2009ல் என் தந்தை நல்ல ஆரோக்கியமாக தான் இருந்தார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தை ஏன் பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் கிராம நத்தம் என்பதால் என்னை வீடு கட்டி அனுபவித்து வருமாறு கொடுத்தார். என் தந்தை வழக்கு சொத்து குறித்து எழுத்து பூர்வமாக ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை என்றால் சரிதான். யாருக்கும் ஆவணம் எழுதிக் கொடுக்கவில்லை. வழக்கு சொத்தை பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் சொன்னவாறு 2009ல் என் தந்தை எனக்கு வாய்மொழியாக சொத்தை கொடுக்கவில்லை என்றும், இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் எனது பெயரில் இந்த வழக்கு சொத்து குறித்து பட்டா வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை எனக்கு வாய்மொழியாக கொடுத்ததன் பேரில் நான் வழக்கு

சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். வாய்மொழியாக கொடுத்ததன் அடிப்படையில் எனக்கு வழக்கு சொத்தில் உரிமை ஏற்படாது என்றால் சரியல்ல. என்னுடைய வீடு கொட்டிவாக்கத்தில் உள்ளது என்றும், தற்போது வரை நான் கொட்டிவாக்கத்தில் தான் வசித்து வருகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் நாவலூரில் தான் 2010ல் இருந்து வசித்து வருகிறேன். பி.சா.ஆ.17 இருப்பிட சான்றிதழை நான் தான் விண்ணப்பித்தேன் என்றால் சரிதான். நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் தான் பி.சா.ஆ.17 இருப்பிட சான்றிதழ் வழங்கப்பட்டது என்றால் நான் கொடுத்த தகவலின் அடிப்படையில் வீட்டின் அருகில் விசாரித்து அதன் பின்னர் வழங்கப்பட்டது. பி.சா.ஆ.17 இருப்பிட சான்றிதழில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 30.12.2019 தேதியில் இருந்து வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2010ல் இருந்து வசித்து வருகிறேன். நான் வழக்கு சொத்தில் 2010ல் இருந்து வசித்து வந்திருந்தால் பி.சா.ஆ.17-ல் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கும் என்றும், எனவே நான் 2010ல் இருந்து வசித்து வருவதாக கூறுவது பொய் என்றும் சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)